A/L 88
விஞ்ஞான வகுப்புக்கள்
Iம், IIம் பிரிவுகள் நடைபெறுகின்றன
IIIம் பிரிவு ஆரம்பமாகின்றது
விபரங்கட்கு:
New Master Institute
B.M.C. Lane, JAFFNA.

Registered as a Newspaper

# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

விலை ரூ. 1/-

யாழ்நகரில் தரமான A/L விஞ்ஞானக் கல்விக்கு என்றும்
New Master Institute
B.M.C. Lane, JAFFNA.

சுடர்:- 1 யாழ்ப்பாணம் அக்ஷய ஹூ ஆனி மீ 32 உ புதன்கிழமை ஹிஜ்ரி 1406 ஜுல்கஃ பிறை 8 (16-07-1986) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர்:-20

முச்சந்திமுறளி



ஓம், ஓம் தேசனும் இவரும் இரகசியத் தொடர்புகாறர்தானே இவை விஷயம் தெரியாமல் வெளிவிட்டிட்டிவமோ பிள்ளே..!

# கடற்படை படகு சுக்கு நூறாகியது

## புலிகளின் கடற்கண்ணியில் சிப்பாய்கள் பலர் மரணம்

யாழ்ப்பாணம், ஜூலை 16

தமிழீழ விடுதலைப் புலிகளால் வைக்கப்பட்ட கடல்கண்ணியில் சிக்கிய காரைநகர் கடற்படையினரின் விசைப் படகு ஒன்று சுக்குநூறாகியது. இதில் இருந்த கடற்படையினர் அனைவரும் கொல்லப்பட்டனர்.

இப்படகில் மொத்தம் 16 பேர் இருந்ததாகச் சொல்லப் படுகிறது.

இது தொடர்பாக தமிழீழ விடுதலைப் புலிகள் நேற்று விடுத்த அறிக்கை வருமாறு:—

நேற்று அதிகாலை 3 மணி அளவில் காரைநகர் கடற்படையினரின் இறங்குதுறைஅருகில் காவலுக்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பீரங்கி பொருத்திய அதி நவீன விசைப் படகு ஒன்று ஏற்கனவே எம்மால் அங்கு வைக்கப் பட்டிருந்த கடல் கண்ணி வெடிக்க வைக்கப்பட்ட போது சுக்கு நூறாகியது.

படகில் இருந்த அனைவரும் இதனால் கொல்லப்பட்டனர். படகின் ஒரு பகுதியையாவது அவர்களால் மீட்கமுடியவில்லை.

இத் தாக்குதலின் போது எமது தரப்பில் எதுவித இழப்புகளும் இல்லை. பின்பு கடற்படையினர் முகாமிலிருந்து மோட்டார் ஷெல் தாக்குதல் நிகழ்த்தினர். (இ-10-6)

## செயற்குழுவுக்கு ஜனாதிபதி விளக்குவார்

கொழும்பு, ஜூலை 16

மாகாணசபை யோசனைகள் பற்றி ஜனாதிபதி ஜெயவர்த்தன ஐக்கிய தேசியக் கட்சி செயற்குழுவுக்கு ஆகஸ்ட் 9ஆம் திகதி விளக்குவார்.

கட்சிச் செயற்குழுவில் நிர்வாகக்குழு உறுப்பினர்களும் அங்கம் வகிக்கின்றனர். (இ-எ)

## இலங்கைக் கடலில் அமெரிக்க யுத்தக் கப்பல்கள் ஒத்திகை

சென்னை, ஜூலை 15

இலங்கைக் கடலில் அமெரிக்க யுத்தக் கப்பல்கள் ஒத்திகை நடத்துகின்றன.

இதுபற்றி இந்தியாவுக்கு நன்றாகத் தெரியும் என்று வெளியுறவு அமைச்சர் பி. சிவ்சங்கர் சென்னை வந்த சமயம் செய்தியாளர்கள் மத்தியில் தெரிவித்தார்.

செய்தியாளர் ஒருவரின் கேள்விக்குப் பதிலளிக்கையில் அமெரிக்க கடற்படை ஒத்திகை இலங்கையின் கடல் எல்லைக்குள் நடப்பதால் அதுபற்றி நாம் பயப்படத் தேவை இல்லை என்றும் சொன்னார். (இ-எ-2)

## வடக்கு, கிழக்கில் அடக்குமுறை குறித்து ஜனாதிபதியிடம் விவரிப்பு

கொழும்பு, ஜூலை 16

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அப்பாவித் தமிழர்களுக்கு எதிராக நடத்தப்படும் அடக்குமுறைச் செயல்கள் பற்றி தமிழர் விடுதலைக் கூட்டணித் தூதுக்குழு, நேற்றுமாலை, ஜனாதிபதி ஜெயவர்த்தனாவைச் சந்தித்து எடுத்துச் சொன்னது.

கூட்டணிக் குழுவில் எட்டுப் பேர் அங்கம் வகித்தனர்.

அரசு தரப்பில் ஜனாதிபதி மட்டுமே கலந்து கொண்டார். இரண்டு மணித்தியாலங்களாக நடந்த இப் பேச்சுக்கள் முழுக்க முழுக்க தமிழ் மக்கள் ஆயுதபடை, ஊர்காவல் படையினரால் படுகொலை செய்யப்படுவது பற்றியே இருந்தன.

காரணமின்றிக் கைது செய்யப்படுதல், தடுப்பு முகாம்களில் துன்புறுத்தப்படுதல், ஊர்காவல் படையினருக்கு ஆயுதம் வழங்குவதன் மூலம் நிலைமையை மோசமாக்கி (4 ஆம் பக்கம் பார்க்க)

## பருத்தித்துறை 2½மணி நேரச் சமர்

பருத்தித்துறை, ஜூலை 16

பருத்தித்துறையில் நேற்று சிப்பாய்களுக்கும் புலிகளுக்கும் இடையில் நேரடிச்சமர் நடந்தது.

நேற்றுக்காலை சிப்பாய்கள் ஓடக்கரை, சின்னப் பிள்ளையார் வீதி ஆகிய பகுதிகளுக்குள் ஊடுருவினார்கள்.

அவர்கள் சுமார் இரண்டரை மணிநேரம் புலிகளுடன் நேரடிச் சமரில் ஈடுபட்டார்கள்.

பின்பு முகாமுக்குச் சென்று ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டனர்.

இதனால் பருத்தித்துறைப் பகுதிப்பாடசாலைகள் முற்பகல் 11-30மணியுடன் மூடப்பட்டன.

தற்காலிக மரக்கறிச் சந்தையும் முற்பகல் 11-00 மணியுடன் கலைந்தது.

பருத்தித்துறை தனியார் மினிபஸ் போக்குவரத்துக்கள் யாவும் கிராமக்கோட்டுச் சந்தியிலிருந்தே நடைபெற்றன.

பருத்தித்துறை நகரப் பகுதியிலிருந்து மக்கள் பாதுகாப்பான இடங்களை நோக்கி இடம் பெயர்ந்தனர்.

இதற்கிடையில் வல்வெட்டித்துறை இராணுவ முகாமிலிருந்து நிகழ்ந்த ஏவப்பட்ட ஷெல் தாக்குதல்களில் இருவர் படுகாயமுற்றனர்.

இவர்களை இப்பகுதி இளைஞர்கள் பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் அவசர சிகிச்சைக்காகச் சேர்ப்பித்தனர்.

அவர்கள் விவரம் வருமாறு:

செல்வி சின்னத்துரை சந்திரலதா (வயது 35) கம்பர்மலை.

திரு. இளையதம்பி வைத்திலிங்கம் (வயது 80) வல்வெட்டித்துறை. (இ-118)

## சிப்பாய்கள் பலர் இறந்ததாக புலிகள் அறிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 16

பருத்தித்துறையில் நேற்று நடந்த சமரில் சிப்பாய்கள் பலர் கொல்லப்பட்டனர் என்று தமிழீழ விடுதலைப் புலிகள் நேற்று விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அறிக்கை விவரம் வருமாறு:-

பருத்தித்துறை இராணுவ முகாமிலிருந்து நேற்றுக் காலை 11-00 மணி அளவில் எம்மக்களை வேட்டை யாடுவதற்காக 100க்கும் மேற்பட்ட இராணுவத்தினர் நடைபவனியாக வி. எம். வீதி வழியாக வர எத்தனித்த சமயம் எம்மவர்கள் கடுமையான எதிர்த்தாக்குதல் நிகழ்த்தியதில் இராணுவத்தினர் நிலைகுலைந்தனர்.

எம்மவர்களின் தாக்குதலில் இராணுவத்தரப்பில் பலர் கொல்லப்பட்டதுடன் சிலர் காயமடைந் (4-ஆம் பக்கம் பார்க்க

## லொறி உரிமையாளர்கள் இன்று ஆர்ப்பாட்டப் பேரணி ஹர்த்தாலுக்கும் அழைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 16

இன்று கோப்பாயில் இருந்து யாழ் செயலகம் வரை ஐந்து மைல் நீள ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று நடைபெறுகிறது.

இப்பேரணியை வட பிராந்திய போக்கு வரத்து சங்கமும், யாழ்-முஸ்லிம் ஒன்றியமும் இணைந்து ஏற்பாடு செய்துள்ளன.

கொழும்பு செல்லும் லொறிகள் இராணுவ முகாமில் பாஸ் பெற்றுச் செல்ல வேண்டும் என்ற உத்தரவை ஆட்சேபித்தே இந்தப்பேரணி நடத்தப்படுகிறது.

கோப்பாய் கந்தசுவாமி கோயில் முன்றலில் இருந்து காலை 8-30 மணிக்கு புறப் டும் இப்பேரணி பருத்தித்துறை வீதியூடாக யாழ் நகரை அடைந்து பின்னர் யாழ் செயலகத்தை சென்றடையும்.

இப் பேரணியில் லொறிகளும் கலந்து கொள்ளும்.

இன்றைய தினத்தில் வர்த்தகர்கள் கடைகளைப் பூட்டியும், மாணவர்கள் வகுப்புகளை பகிஷ்கரித்தும் பேரணியில் கலந்து கொள்ளுமாறு நேற்று நகரிலே ஒலி பெருக்கி மூலம் வேண்டு கோள்விடுக்கப்பட்டது.

இப் பேரணிக்கு யாழ் வர்த்தகர் சங்கமும் தனது முழுமையான ஆதரவைத் தெரிவிக்கும் என அறிவித்துள்ளது. (இ-10)

## திருமலையில் எலிபென்ட் ஹவுஸ் குளிர்பானத் தொழிற்சாலை குண்டு வெடிப்பால் சேதம்

திருகோணமலை, ஜூலை 16

திருகோணமலை நகரில் உள்ள எலிபென்ட் ஹவுஸ் குளிர்பானத் தொழிற்சாலையில் குண்டு வெடித்தது.

நேற்று அதிகாலை 12-30 மணியளவில் இச் சம்பவம் இடம்பெற்றது.

குண்டு வெடித்த பயங்கரச் சத்தம் திருமலை நகரையே அதிரச் செய்தது.

மூன்று இளைஞர்கள் தொழிற்சாலைக்குள் நுழைந்து காவலாளர் ஆர்தர் என்பவரைக் கட்டிப்போட்டுவிட்டுகுண்டு வைத்து விட்டுச் சென்றனராம். (இ-எ-150)

## யாழ் செயலகம் முன் நாளை மறியல்

யாழ்ப்பாணம், ஜூலை 16

1980 ஜூலை பொது வேலை நிறுத்தம் நினைவாக யாழ் செயலகம் முன் மறியல் போராட்டம் ஒன்றை நடத்த வட பிரதேச தொழிற் சங்கங்கள் ஏற்பாடு செய்துள்ளன.

நாளை பகல் 12 மணி முதல் 1 மணி வரை இம் மறியல் போராட்டம் நடைபெறும்.

இது சம்பந்தமாக வட பிரதேச தொழிற் சங்கங்கள் கூட்டாக வெளியிட்டுள்ள பிரசுரமொன்றில் 1980 ஜூலை வேலை (4-ஆம் பக்கம் பார்க்க)

## இரண்டை இணைக்க சம்மதமில்லை

# மாகாணசபை யோசனையை 7 அரசியல் கட்சிகள் ஏற்றன

## காங்கிரஸ் நிராகரித்தது ஜனாதிபதி நேற்று அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 16

இரண்டு மாகாணங்களை ஒன்றாக இணைக்காத முறையில் ஒவ்வொரு மாகாணத்துக்கும் ஒவ்வொன்றாக ஒன்பது மாகாண சபைகளை அமைக்கும் திட்டத்தை அரசியல் கட்சிகள் மாநாட்டில் பங்குபற்றும் 7 அரசியல் கட்சிகள் ஏற்றுக் கொண்டுள்ளன.

அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் மட்டும் மகாணசபைத் திட்டத்தை ஏற்கவில்லை.

இப்படி ஜனாதிபதி ஜெயவர்த்தன நேற்றுக் காலை அரசியல் கட்சிகள் மாநாட்டில் தெரிவித்தார்.

பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் மாநாடு நேற்றுக் காலை 10 மணிக்கு மீண்டும் ஆரம்பமானது.

மாகாணசபை யோசனைகள் பற்றிய கட்சிகளின் அபிப்பிராயங்கள், நேற்று கட்சிகளின் பிரதிநிதிகளுக்குத் தெரிவிக்கப்பட்டன.

பின்னர் ஜனாதிபதி ஓர் அறிக்கை விடுத்தார்.

ஜூன் 25 இல் நடந்த அரசியல் கட்சிகள் மாநாட்டில் கலந்து கொண்ட அரசியல் கட்சிகளில் ஏழு கட்சிகள் மாகாண சபைத் திட்டத்தை ஏற்றன.

இரண்டு மாகாணங்கள் ஒன்றாக இணைக்கப்படக் கூடாது. ஒரு மாகாணத்துக்கும் ஒன்றாக ஒன்பது மாகாண சபைகள் நிறுவப்பட வேண்டும்.

ஆனால் மாகாண எல்லைகளை வேண்டுமானால் மாற்றி அமைக்கலாம் — இப்படி கட்சிகள் அபிப்பிராயம் தெரிவித்துள்ளன.

மாகாண சபைக்கான சட்டம் பற்றியும் சபை அமைப்புப் பற்றியும் பல தரப்பட்ட கருத்துக்களை கட்சிகள் தெரிவித்துள்ளன.

கட்சிகளின் அபிப்பிராயங்களை ஆராய்ந்து ஒழுங்குபடுத்த ஐந்து குழுக்களை நியமிப்பது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இப்படி ஜனாதிபதியின் அறிக்கை தெரிவித்தது. (இ-எ)

## குழுநிலையில் நடக்கும் மாநாட்டில் காங்கிரஸ் பங்குபற்ற மாட்டாது

கொழும்பு, ஜூலை 16

குழு நிலையில் நடைபெறும் அரசியல் கட்சிகள் மாநாட்டில் தமிழ் காங்கிரஸ் இனிப் பங்குபற்ற மாட்டாது.

முழு அளவிலான அரசியல் கட்சிகள் மாநாட்டில் தான் காங்கிரஸ் இனிமேல் பங்குபற்றும்.

இப்படி அறிவித்துவிட்டு நேற்றுக் காலை நடந்த அரசியல் கட்சிகள் மாநாட்டில் இருந்து வெளியேறினார் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் செயலாளர் திரு குமார் பொன்னம்பலம்.

மாநாடு ஆரம்பமானதும் ஜனாதிபதி அறிக்கை ஒன்றை வாசிக்கத் தொடங்கினார்.

அதில் தன்னைச் சந்தித்த சகல கட்சிகளும் மாகாணசபைத் திட்டத்தை ஏற்று இருப்ப (4 ஆம் பக்கம் பார்க்க)

## சுபநேரம்

16—07—1986

புதன்கிழமை

சுபநேரம்:
4-30 முதல் 6-00 வரை

ராகுகாலம்:-
12-00 முதல் 1-30 வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

நவமி முற்பகல் 7-07 வரை

தக்ஷிணாயன புண்ணிய காலம்

## தொண்டமான் விலகும் எண்ணம் இல்லை

சென்னை, ஜூலை 15

இலங்கை அமைச்சரவையில் இருந்து விலகும் எண்ணம் எனக்கு இடையவே கிடையாது.

இப்படி அமைச்சர் தொண்டமான் செய்தியாளர்கள் மத்தியில் சொன்னார்.

தோட்டத் தொழிலாளரின் நலன்கள்பாதுகாக்கப்பட அரசுடன்சேர்ந்து இயங்க வேண்டியுள்ளது.

— இப்படியும் திரு. தொண்டமான் சொன்னார். (இ-எ-2)

## அடம்பனில் கொல்லப்பட்டோர் சடலங்கள் அதே இடத்தில் எரிப்பு

### காயத்துடன் யாழ் வந்த பெண் தகவல்

யாழ்ப்பாணம், ஜூலை 16

கடந்த திங்கட்கிழமை அடம்பனில் சிப்பாய்களினால் கொல்லப்பட்டவர்களில் பலரது சடலங்கள் அந்தந்த இடங்களிலேயே போட்டு எரிக்கப்பட்டன.

அடம்பன் பகுதியில் நடைபெற்ற சிப்பாய்கள் —புலிகள் மோதலின் போது காயமடைந்த செபஸ்தியாம்பிள்ளை தவமலர் (47வயது)இப்படிக் கூறினார்.

காலில் காயத்துடன் யாழ் ஆஸ்பத்திரியில் இவர் சேர்க்கப்பட்டுள்ளார்.

மன்னாரில் நடந்த சம்பவம் பற்றி அவர் மேலும் சொன்னதாவது:

மன்னார் அடம்பன் பகுதியில் நடைபெற்ற மோதலின் போது சுமார் 50 பொதுமக்கள் கொல்லப்பட்டனர். இதில் அனேகர் ஆண்கள். முஸ்லிம்களும் அடங்குவர்.

நேற்று முன்தினம் அதிகாலை ஐந்து மணியளவில் அடம்பன் பகுதியை நோக்கி வந்த இரண்டு பொம்மர் விமானங்களும், ஹெலிக்கொப்டர்களும் அடம்பன் பகுதியைச் சுற்றி குண்டுகளைப் பொழிந்தன.

இதனால் அடம்பன் பகுதியில் உள்ள பல கடைகள், வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன.

இறந்தவர்களது சடலங்கள் அனைத்தும் அந்தந்த இடங்களிலேயே போட்டு மண்ணெண்ணை ஊற்றி கொளுத்தப்பட்டன.

எமது வீட்டுக்கு முன்னால் உள்ள முஸ்லிம் ஒருவரது வீட்டுக்குள் சென்ற சிப்பாய்கள் அங்கிருந்த அனைவரையும் சுட்டுக் கொன்றனர்.

வேறு ஒரு கடைக்குள் இருந்த இரண்டு பேரையும் இவர்கள் சுட்டனர்.

இதனால் இப்பகுதியில் இருந்த அனேகம் பேர் அடம்பன் பகுதியை விட்டு வெளியேறிக் கொண்டிருக்கின்றனர்.

—இப்படி அவர் சொன்னார். (இ-10)

## அமிர் சொல்ல அத்துலத் மறுத்தார்

கொழும்பு, ஜூலை 16

மன்னார், அடம்பன் பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை உயிரிழந்தவர்கள் அப்பாவித் தமிழர்களே.

இப்படித் தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலதிபர் திரு. அ.அமிர்தலிங்கம் கடந்த திங்கள் மாலை நடந்த அரசு — கூட்டணிப் பேச்சுக்களின்போது தெரிவித்தார்.

ஜனாதிபதியுடன் கூட இருந்த தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத் முதலி குறுக்கிட்டு, 'இல்லை, உயிரிழந்தவர்கள் அனைவரும் தீவிரவாதிகள்' என்று சொன்னார். (இ-எ-2)

## பிரபாகரன் குமாரணதுங்க சந்திப்பு

புதுடில்லி, ஜூலை 15

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் திரு. வே. பிரபாகரனை இலங்கை மக்கள் கட்சிச் செயலாளர் திரு. விஜய குமாரணதுங்க சென்னை விமான நிலையத்தில் வைத்துச் சந்தித்தார்.

உங்களைப் போன்று இத்தகைய தெளிவுள்ளவர்கள் சிங்களவர் மத்தியில் இருப்பது மகிழ்ச்சி தருகின்றது—இப்படி திரு. பிரபாகரன் திரு. விஜய குமாரணதுங்காவிடம் சொன்னதாக புதுடில்லியில் இருந்து கிடைத்த செய்தி கூறியது. (இ-எ-2)

## ஏழு சடலங்கள் அடையாளம் காணப்பட்டன

யாழ்ப்பாணம், ஜூலை 16

கடந்த திங்கட்கிழமை மன்னாரில் சுட்டுக் கொல்லப்பட்டு மன்னார் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருந்த 18 சடலங்களில் ஏழு சடலங்கள் நேற்று அடையாளம் காணப்பட்டு உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டன.

இந்தச் சடலங்களில் ஐந்து தமிழர்களுடையது. இரண்டு முஸ்லிம்களுடையது.

ஏனைய 11 சடலங்களும் இன்று அடையாளம் காணப்பட்டு உறவினர்களிடம் ஒப்படைக்கப்படும் எனத் தெரியவருகிறது. (இ-10)

இளைய தலைமுறையின் இதயம் தழுவும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடக்கு கிழக்கில்

# குளங்களைத் திருத்தும் வேலை இடை நிறுத்தப்

யாழ்ப்பாணம், ஜூலை 16
வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கான நீர்ப்பாசனப் புனர்நிர்மாணத் திட்டங்கள் அரசால் இடை நிறுத்தப்பட்டுள்ளன. இதனால் 30க்கு மேற்பட்ட குளங்களின் திருத்த வேலைகள் நிறுத்தப்பட்டுள்ளன.

இதுவரை கிராமிய நீர்ப்பாசன புனர்நிர்மாணத் திட்டத்தின் கீழ் சமத்தொழில் சேவைத் திணைக்களம் இவ்வேலைகளை செய்து வந்தது.

இம்மாதம் முதல் புனர்நிர்மாண வேலைகளை நிறுத்துமாறு வடக்கு, கிழக்கு சமத்தொழில் சேவை திணைக்களங்களை அரசு பணித்துள்ளது.

இதற்கான காரணம் எதுவும் அரசால் கூறப்படவில்லை.

இத்திட்டத்துக்கான பணம் உலக வங்கி மூலமே இதுவரை பெறப்பட்டு வந்தது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## மட்டக்களப்பில் ஏழு முகாம்களில் 9,819 அகதிகள்

மட்டக்களப்பு, ஜூலை16
மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள ஏழு முகாம்களில் 2169 குடும்பங்களை உள்ளடக்கிய 9819 பேர் தற்போது அகதிகளாக தஞ்சம் புகுந்துள்ளார்கள். இந்த அகதிகளுக்கு அரசின் வாராந்த உணவுப் பொருட்கள் கிடைக்கின்றன. பொதுஸ்தாபனங்களும் உதவி வருகின்றன.

இத்தகவலை மட்டக்களப்பு அரசாங்க அதிபர் திரு எம். அந்தோனிமுத்து செயலகத்தில் நடத்திய செய்தியாளர் மகாநாட்டில் தெரிவித்தார்.

அரசாங்க அதிபர் மேலும் தெரிவிக்கையில்:

புல்லுமலை இராணுவ முகாம் தாக்குதலை அடுத்து அப்பகுதியில் ஏற்பட்ட அசம்பாவிதங்களால் 148 வீடுகள் சேதமாகின. இச்சம்பவ எதிரொலியாக 320 குடும்பங்களைச் சேர்ந்த 1624 பேர் அகதிகளாகி நான்கு முகாம்களில் தங்கியுள்ளார்கள். மைப்பு நடவடிக்கைகள் பூர்த்தியானதும் பாவனை பொருள் கொள்வனவுக்கு தலா 1000 ரூபா வழங்கப்பட்டு இவர்கள் குடியமர்த்தப்படுவார்கள்.

திருமலை அகதிகளைப் பொறுத்தவரை ஏற்கனவே 1400 குடும்பங்களை சேர்ந்த 6300 பேர் 3 முகாம்களில் தங்கி உள்ளனர். சிவம்பத்தை சம்பவத்தை தொடர்ந்து மேலும் 449 குடும்பங்களைச் சேர்ந்த 1895 பேர் தஞ்சம் புகுந்துள்ளார்கள். இப்படி அவர் கூறினார். (இ-21)

# பனம்பொருள் உற்பத்தி: முதலீடு செய்க

### பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஜூலை 16
கூட்டுறவு இயக்கங்கள், தனியார் ஸ்தாபனங்கள், கம்பனிகள், ஆகியவை இப்பிரதேச பனைவளத்தை அபிவிருத்தி செய்து உற்பத்தியைப் பெருக்கும் கைத்தொழில்களில் முதலீடு செய்ய முன்வர வேண்டும்.

பனை அபிவிருத்தி, சபைத் தலைவர் திரு. க. நடராசா இவ்வாறு வேண்டுகோள் விடுத்தார்.

பனை அபிவிருத்திச் சபை மாநாட்டு அறையில் திங்கள் மாலை நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் இவ்வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

பத்திரிகையாளர் மாநாட்டில் திரு. க. நடராசா தொடர்ந்து கூறியதாவது:-

பனம்பழ உற்பத்தி, பதநீர், பனமதுசாரம், பனைமரம், பனந்தும்பு ஆகியவற்றை அடிப்படையாக வைத்துப் பல கைத்தொழில்களைத் தொடங்க இவர்கள் முன்வர வேண்டும்.

இவற்றை அடிப்படையாகக் கொண்டு இவ்வுற்பத்திகளைச் செய்யலாம் என்பதைப் பனை அபிவிருத்திச் சபை பரீட்சார்த்த ரீதியில் நிரூபித்துள்ளது.

இவ்வுற்பத்திகளை உள்ளூரிலும், வெளிமாவட்டங்களிலும், பிறநாடுகளிலும் சந்தைப்படுத்த வாய்ப்பு உண்டு. பல ஆயிரம் பேருக்குத் தொழில் வாய்ப்பு ஏற்படும்.

பனைமரத்தில் இருந்து தயாராகும் அழகியல் சார்ந்த உற்பத்திகளுக்கும் நிறைய கிராக்கி உண்டு. இவற்றினை வீடு வீடாக எடுத்துச் சென்று அறிமுகம் செய்து [illegible] அளிக்க விரும்புகிறோம்.

இவ்வாறு பனை அபிவிருத்திச் சபை கைத்தொழில்களில் ஈடுபடுபவர்களுக்கு தொழில் நுட்ப ஆலோசனைகள், இயந்திரசாதன வசதிகள், கடன்வசதிகள் ஆகியவற்றைப் பெற்றுக் கொடுக்கவும் அவர்களின் உற்பத்திகளைச் சந்தைப்படுத்தும் வாய்ப்புக்களை உருவாக்கவும் பனை அபிவிருத்திச் சபை தயாராக உள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.

பாம்லாக்கர் என்ற வைத்திய ரீதியாகத் தயாரிக்கப்பட்ட வைன் ரொனிக் யல் என்ற பனஞ்சாராயம், பியரை ஒத்த பாம்பெல், பனம் கோர்டியல், பாம்சிரப், பனம் ஜாம் ஆகியவை மாநாட்டில் பார்வைக்கு வைக்கப்பட்டு இருந்தன (இ-9)

### இருவருக்கு அஞ்சலி

யாழ்ப்பாணம், ஜூலை 16
சு யிறு காலை வெடிமருந்து பரிசோதனையில் எம்மவர்கள் ஈடுபட்டுக் கொண்டிருந்த சமயம் ஏற்பட்ட விபத்தொன்றில் இருவர் இறந்தனர்.

நிசாந்தன் (செங்காரன் — காத்தான்குடி மட்டக்களப்பு)

தேவா (சிறீகாந்தன்— யாழ்ப்பாணம்) இவர்களுக்கு எமது வீரவணக்கங்களை தெரிவிக்கிறோம்.

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் குறிப்பு ஒன்று தெரிவிக்கிறது. (இ)

### 'விஜே' திரும்பினர்

கொழும்பு, ஜூலை 15
இந்திய விஜயத்தை முடித்துக் கொண்டு இலங்கை மக்கள் கட்சிச் செயலாளர் திரு. விஜய குமாரணதுங்க நேற்றுக் காலை 11 மணியளவில் கொழும்பு திரும்பினார்.

இந்திய விஜயத்தின் போது திரு குமாரணதுங்க சென்னையில் தமிழ் போராளித் தலைவர்களைச் சந்தித்துப் பேசினார். (எ)

### மாகாணசபைத்திட்டம் அமுல்

## எதிர்ப்பு தடையாக இருக்க மாட்டாது என்கிறார் ஹர்ஷா

கொழும்பு, ஜூலை 16
அரசியல் கட்சிகள் சிலவற்றின் எதிர்ப்புகள் மாகாணசபைத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்குத் தடையாக இருக்கா.

இப்படி ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் திரு. ஹர்ஷா அபயகுணவர்த்தன தெரிவித்தார்.

சுதந்திரக் கட்சி, மக்கள் ஐக்கிய முன்னணி, மகாசங்கம் ஆகியன மாகாணசபைத் திட்டத்தை மும்முரமாக எதிர்க்கின்றன.

இவற்றின் எதிர்ப்புக்கள் பலமானவை அல்ல. எப்படியும் மாகாணசபைத் திட்டத்தை அரசு நிறைவேற்றியே தீரும்.

இப்படி திரு ஹர்ஷா அபயகுணவர்த்தன சொன்னார். (இ-எ)

தெல்லிப்பளை - பன்றுலை வரத்தலம்
ஸ்ரீ கற்பக விநாயகர் தேவஸ்தானம்

### பத்தாவது ஆண்டு மகோற்சவ விஞ்ஞாபனம்

விநாயகநேயச் செல்வர்களே!

நிகழும் மங்களகரமான அக்ஷய ஸ்ரீ ஆவணி மீ 7ஆம் திகதி (23-08-1986) சனிக்கிழமை பகல் 12.15 மணிக்குத் துவஜாரோகணமாகித் தொடர்ந்து பன்னிரு தினங்கள் மகோற்சவம் நிகழத் திருவருள் பாலித்துள்ளதால் அடியார்கள் அனைவரும் தங்களால் இயன்றளவு பணவுதவியாகவோ, பொருளுதவியாகவோ கொடுத்து பன்னிரு மஹோற்சவப் பெருவிழாக்களிலும் ஆலயத்திற்கு வந்து விநாயகப் பெருமானைத் தரிசித்து இஷ்ட சித்திகளைப் பெற்றுய்யும் வண்ணம் வேண்டுகின்றோம்.

மேற்கூறிய தேவஸ்தான துவஜாரோகணம் பொது உபயமாகையால் இதற்கான பணத்தையோ, பொருட்களையோ கொடுப்பதற்கு நீங்கள் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:-

செல்வி மல்லிகா மகேஸ்வரக்குருக்கள்,
வரத்தலம் கற்பக விநாயகர் தேவஸ்தானம்,
பன்றுலை, தெல்லிப்பளை.


## பிரயாண ஒழுங்குகள்

* கனடா
* ஜேர்மனி
* பிரான்ஸ்
* டென்மார்க்

ஆகிய நாடுகளுக்கு பிரயாண ஒழுங்குகளை மேற்கொள்ளவும்

மற்றும்

பாஸ்போட், விசா, பொன்ட், (BOND) ரிக்கட்

ஆகியனவும் செய்துகொடுக்கப்படும்.

**INTERSUN GROUP**

சின்னத்தம்பி அவெனியூ,
(ஈவினை சந்திக்கருகாமையில்)
மானிப்பாய்.


## மாநிலம் - மாவட்டம் - உள்ளூர்

# இளைஞரின் உணர்ச்சிக்கு உரமூட்டுவோர் அரசும் படைகளுமே

### அஞ்சலிக் கூட்டத்தில் உரை

உடுவில் ஜூலை 16
"தமிழ், ஈழத்தைப் பெற்றே தீருவோம் என்ற இளைஞர்களின் உணர்ச்சிகளுக்கு உரமூட்டுபவர்கள் அரசும் அரசபடைகளுமே. ஆனை பிறவுக்கு அப்பால் ஒரு நீதியும் இப்பால் ஒரு நீதியுமாக செயல்படும் அரசின் நடவடிக்கைகளே தமிழ் ஈழம் அமைவதற்கு சாதகமாக உள்ளன.

முன்னாள் கல்விப் பணிப்பாளரும் சுன்னாகம் பிரஜைகள் குழு தலைவருமான திரு. இ. மாணிக்கவாசகர் மல்லாகத்தில் நடந்த அஞ்சலிக் கூட்டத்தில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சுன்னாகம் - மல்லாகம் - [illegible] - குராவத்தை ஆகிய நான்கு ஆலயங்களில் இருந்து ஆரம்பமான மாபெரும் சிலுவை ஊர்வலங்கள் மல்லாகம் சந்தியில் சங்கமித்து பிரமாண்டமான மௌன ஊர்வலமாக மல்லாகம் சதாசகாய அன்னை சந்நிதானத்தை வந்தடைந்தது.

ஆலய முன்றலில் நடைபெற்ற அஞ்சலிக் கூட்டத்துக்கு சுன்னாகம் பங்குத்தந்தை அருட்திரு போகராசா அடிகளார் தலைமை வகித்தார்.

தலைவர் அருட்திரு போகராசா அடிகளார் பேசுகையில் பேசுபிரான் துயரிபட்டார் சிலுவை சுமந்தார் மக்களால் போற்றப்படுகிறார். நீங்களும் இன்று பிறர் துயர் நீங்க சிலுவை சுமந்தீர்கள். சமூக விடுதலைக்காக உங்கள் பெயரும் போற்றப்படும் என்றார்.

மல்லாகம் பிரஜைகள் குழு தலைவர் சட்டத்தரணி ஸ்ரீதரன் பேசுகையில் அந்தோனிக்கு நடந்த வேள்விசிலாக அரசபடைகளால் கட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் ஜே.ஆரின் அரச பௌத்த மதம் தழுவிய ஏனைய மதங்களை எவ்வாறு மதிக்கிறது என்பதற்கு மேலும் நல்ல சான்றாகும் என்றார். சந்நிதி முருகன் ஆலய பூசகர் கொல்லப்பட்டதையும் அவர் நினைவுபடுத்தினர்.

யாழ் மாவட்ட சபை முன்னாள் தலைவர் சட்டத்தரணி எஸ். நடராஜா உரையாற்றுகையில் சாதி, மத, இன வேறுபாடுகள் நிறைந்த தமிழ் சமுதாயம் எல்லா பேதங்களையும் மறந்து தமிழ் ஈழத்துக்காக போராட வந்தது ஜனநாயக விரோத ஜே ஆர் அரசால் என்றார்

திரு. ஆசீர்வாதம் நன்றி நன்றியுரை ஆற்றினர். (இ-27)

## இன்றைய பேரணியை ஆதரித்து 'புளொட்' அறிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 16
வடபிராந்திய லொறி போக்குவரத்துச் சங்கமும் யாழ் முஸ்லிம் போக்குவரத்துச் சங்கமும் இணைந்து இன்று நடத்தும் மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணிக்கு ஆதரவு தெரிவித்து தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் பின்வரும் அறிக்கையை விடுத்துள்ளது.

அறிக்கை வருமாறு:—
எமது விடுதலைப் போராட்டம் நெருக்கடியான நிலையிலும் முன்னேறி வரும் இவ்வேளையில் போராட்டத்தில் இணைந்துள்ள மக்களை போராட்டத்தில் இருந்து அன்னியப்படுத்தும் நோக்கில் பல நெருக்கடிகளை மேற்கொண்டு வருவது சிறீலங்கா அரசின் வழமையான நிகழ்வாகிவிட்டது.

இந்த வகையில் லொறிப் பாஸ் போன்ற கெடுபிடிகளால் வாகனங்களை தடுத்து பொருளாதாரத் தடையை மேற்கொண்டு விடுதலைப் போரை ஒடுக்க முடியும் என கனவு கண்டு செயற்படுகிறது.

தனது இராணுவ ஆட்சியை திணிக்கும் ஒரு அம்சமாக கொழும்பு செல்லும் வாகனங்கள் இராணுவமுகாமில் பாஸ் பெற வேண்டும் என்ற புதிய அடக்குமுறைச் சட்டத்தை இயற்றியுள்ளது.

இத்தகைய எத்தகைய தடைகளை மேற்கொண்டாலும் எமது விடுதலைப் போரை ஒடுக்க முடியாது என்பதையும் இறுதிவரை எமது இலட்சியப் போரில் உறுதியாக செயற்படுவோம் என்பதையும் சிறீலங்கா அரசிற்கும், சர்வதேச நாடுகளுக்கும் எடுத்தியம்புவது அவசியமாகும்.

இந்தவகையில் எமது பூரண எதிர்ப்பைக் காட்டும் வண்ணம் வடபிராந்திய லொறி போக்குவரத்துச் சங்கமும் யாழ் முஸ்லிம் போக்குவரத்துச் சங்கமும் இணைந்து இன்று 16 ஆம் திகதி காலை 8.30 மணிக்கு கோப்பாய் சந்தியில் இருந்து நடத்தும் ஆர்ப்பாட்டப் பேரணியில் அனைத்து மக்களும்; வெகுஜன அமைப்புக்களும் தங்கள் பங்களிப்பை பூரணமாக நல்கி தங்கள் பலமான எதிர்ப்பைக் காட்டுவதோடு எமது போராட்டத்தை மேலும் செழுமைப்படுத்தும் நோக்கிலும் எமது செயற்பாடுகளை ஆக்கிக் கொள்வோம்'

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

வடக்கில் மகளிர் கல்லூரிகளை இணைத்து

## மாணவிகள் ஒன்றியம் புதிதாக உருவாகும்

### கல்விப் பணிப்பாளர் தகவல்

யாழ்ப்பாணம், ஜூலை16
வடபகுதி மகளிர் பாடசாலைகளில் உள்ள உயர்தர மாணவிகள் ஒன்றுசேர்ந்த "மாணவிகள் ஒன்றியம்" ஒன்று உருவாக்கப்பட உள்ளது.

கல்விப் பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம் இதனைத் தெரிவித்தார்.

யாழ் வேம்படி மகளிர் கல்லூரியில், அதிபர் திருமதி எஸ். ராஜரட்ணம் தலைமையில் நடைபெற்ற இல்ல விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

இதுபற்றி மேலும் கூறியதாவது;

கலவன் பாடசாலைகளிலுள்ள மாணவிகளின் பிரச்சினைகள் அங்குள்ள மாணவர்களால் மூடி வைக்கப்பட்டு தீர்க்கப்படுகின்றன.

எனவேதான் மகளிர் கல்லூரி மாணவிகளின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு ஓர் ஒன்றியம் அவசியமாகிறது.

மாணவிகளின் பாடசாலை, போக்குவரத்து, பரீட்சை சம்பந்தமான சகல பிரச்சினைகளையும் இந்த ஒன்றியம் மூலம் தீர்க்கப்படும்.

இதற்கு பொறுப்பான ராக கல்வித்திணைக்களத்தில் தனி அதிகாரி ஒருவரும் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஒவ்வொரு கல்லூரியிலும் ஆயிரம் மாணவிகளுக்கு ஒரு பிரதிநிதி என்ற அடிப்படையில் இந்த ஒன்றியத்திற்கு பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்படுவர்.

இப்படி அவர் கூறினார்.

## வவுனியா நகருக்கு வந்த இருவர் கைது

யாழ்ப்பாணம், ஜூலை16
உணவுப் பொருள்கள் வாங்க வவுனியாச் சந்தைக்கு வந்த இரண்டு தமிழ் இளைஞர்கள், நேற்றுக் காலை ஆயுதப் படையினரால் கைது செய்யப்பட்டனர்.

நெடுங்கேணிக் கிராமத்தில் இருந்து உணவுப் பொருள்கள் வாங்க வந்த செல்வராசா, செல்லத்துரை ஆகிய இளைஞர்களே இப்படிக் கைதாகினார்கள்.

தீவிரவாதிகளுடன் இவர்களுக்குத் தொடர்பு உள்ளதாக தகவல் கிடைத்ததைத் தொடர்ந்து தான் இவர்கள் கைது செய்யப்பட்டதாக பாதுகாப்பு வட்டாரம் [illegible] (இ-எ)

## சரவணையில் சிரமதானம்

யாழ்ப்பாணம், ஜூலை 16
சரவணை திருவள்ளுவர் சனசமூக நிலையத்தினால் கடந்த 9 ஆம் திகதி தொடக்கம் 12 ஆம் திகதி வரை சிரமதான பணி மேற்கொள்ளப்பட்டது

இந்த சிரமதானப் பணியின் போது சரவணை மேற்கு சனியமக்க வீதி திருத்தப்பட்டது.

ஆகஸ்ட் முற்பகுதியில் நடைபெற உள்ள மற்றொரு சிரமதானப் பணியின் போது சரவணை கிழக்கு தெங்கங்குளத்தின் துடனை வாய்க்கால் வேலைகள் மேற்கொள்ளப்படும். (இ)

### முருகையனின் இரு நூல்கள்

யாழ்ப்பாணம் ஜூலை.16
கவிஞர் இ முருகையனின் இருநூல்கள் விரைவில் தேசிய கலை இலக்கியப் பேரவையினால் வெளியிடப்படவுள்ளன.

சமீப காலமாக யாழ் குடாநாட்டின் பலபகுதிகளிலும் அரங்கேறி வரும் முருகையனின் "வெறியாட்டு" என்ற நாடகத்தை நூல்வடிவில் வெளியிடுவதுடன் கவிஞரின் மற்றுமொரு படைப்பான 'அது அவர்கள்'' என்ற கவிதை நூலையும் வெளியிடவுள்ளனர். (இ)

### பிறந்த தின வாழ்த்து

செல்வன் சதீஸ்வரன் (நீபன்) சுழிபுரம்

சுழிபுரம் பெரியபுலோவைச் சேர்ந்த N. S முத்து—தங்கமணி தம்பதிகளின் செல்வப் புதல்வன் சதீஸ்வரன் (நீபன்) 16-7-86 இன்று தனது முதலாவது பிறந்த தினத்தை சுழிபுரத்தில் கொண்டாடுகிறார். இவரை வாழ்த்துவோர் அம்மா, அப்பா, அப்பு, இரத்தினசிங்கம் சித்தப்பா குடும்பத்தினர், நாகராசா மாமா குடும்பத்தினர், அளவெட்டியைச் சேர்ந்த தவமணிதேவி, பெரியம்மா, குஜினி, பவானி, சசி அக்காமார்கள், சாவகச்சேரியைச் சேர்ந்த அப்பம்மா, அம்மப்பா, குஞ்சு அக்கா நந்தா சித்தி, பொன்னையா மாமா குடும்பத்தினர், செல்வா குடும்பத்தினர், கிளி மாமா, கண்டாவளையைச் சேர்ந்த ராஜா மாமா குடும்பத்தினர், நாராந்தனையைச் சேர்ந்த ராசன், சிவக்கொழுந்து குடும்பத்தினர் மற்றும் உற்றார், உறவினர்கள் நீடூழி வாழ்கவென வாழ்த்துகிறார்கள்


### வைத்தியம்

ஒப்பரேஷன் இல்லாமல் பல குணப்படாத நோய்கள், சலப்பையிலும் சிறுநீரகத்திலும் கல்லுண்டாகியிருந்தும் சிறுநீர் போவதற்குக் கஷ்டப்படுதலும், பிறஷர், நெஞ்சு — வயிற்றோடு சேர்ந்த ரோகங்களும், வாதம், வலிவலை, நரம்பு. தோற்புரை நோய்களும் மற்றும் குணப்படுத்தமுடியாத நோய்களுக்கும் மிகக் குறுகிய காலத்துள் சிகிச்சை அளிக்கப்படும். தொடர்பு: டாக்டர் த. விஸ்வநாதன் M R S.H. (லண்டன்), "ராஜன் தான்", கீரிமலை வீதி, கன்டிவிப்பாய்.



வெளிவந்துவிட்டது!

"கேள்வி நெகிழ்ச்சி நிரம்பல் நெகிழ்ச்சி"
பற்றிய தத்துவங்கள்

ந. பேரின்பநாதன் M.A.
(விரிவுரையாளர், யாழ். பல்கலைக்கழகம்)

G C.E. A/L மாணவர்களுக்கான வினா விடையும் இலவச இணைப்பாக உள்ளது. விலை ரூ.12/-

வெளியீடு: பட்டப் படிப்புகள் கல்லூரி
148/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.



## யாழ். மக்களுக்கு ஓர் நற்செய்தி!

யாழ்நகர் செல்ல முடியாத நிலையில் பாதுகாப்பான சூழலில் உங்களின் நன்மை கருதி பதனிடப்பட்ட

* கடல் உணவுப் பொருட்களும்
* இறைச்சி வகைகளும்

இன்று 16-07-1986 புதன்கிழமை முதல்
மொத்தமாகவும் சில்லறையாகவும்
விநியோகிப்போர்

"A.P.A.T."

இல. 11, திருநெல்வேலி சந்தை முன்பாக (மேல் மாடி), திருநெல்வேலி. T'Phone: 22029

'உங்கள் தேவையே எங்கள் சேவை.
உங்கள் ஒத்துழைப்பு எமக்கு அவசியம்தேவை.'



## வியாபாரம் பெருக விளம்பரம் செய்க


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## உதய சங்கற்பம்

நீ விரும்பிய வண்ணமே ஆகலாம் அதற்கு நீ நல்ல முறையில் செயல்பட வேண்டும். ஏனென்றால் எண்ணத்தின் விளைவுதான் உன் செயலாக மாறுகிறது. நீ நினைத்த வண்ணமே ஆக முடியும்.

—சுவாமி சிதானந்தா.

உதயன்
உண்மை - விஞ்ஞானம் - நடுநிலைமை
இல. 15 2வது ஒழுங்கை தொலைபேசி 24805
விக்டோரியா நிலைய வீதி, 22073
யாழ்ப்பாணம், 16-07-86 த.பெ. 23

## தீவுப்பகுதி அபிவிருத்தி

தீவுப் பகுதியின் தேவைகள், குறைபாடுகள், அபிவிருத்தி என்பன குறித்து அக்கறை செலுத்தத் தொடங்கப்பட்டிருக்கிறது. அவற்றை ஆராய்வதற்கான கருத்தரங்கு ஒன்று சென்ற வாரம் நடைபெற்றது. கருத்தரங்கைத் தொடர்ந்து தீவுப்பகுதி அபிவிருத்திக் கழகம் ஒன்றும் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டிருக்கிறது.

பிரஸ்தாப சங்கம் பெயரளவில் மட்டும் இருக்கும் சங்கங்கள் போலன்றி, வேண்டிய உத்வேகத்துடனும், துடிப்புடனும் இயங்கும் என எதிர்பார்க்கிறோம்.

இலங்கை ஒரு தீவு அந்தத் தீவின் தலைப் பகுதிதான் யாழ்ப்பாணக் குடாநாடு. குடா நாட்டின் அருகே உள்ளன அழகிய ஏழு தீவுகள். அவற்றை ஒன்றுசேர்த்தே தீவுப்பகுதி என்று அழைக்கிறோம்.

தீவுப்பகுதி, சரித்திர காலம் தொட்டுக் அரசியல், சமய, கலாசாரத் துறைகளில் சிறப்புப் பெற்ற இடம் குறிப்பாக தமிழ் அபிமானமும், பற்றும் நிறைந்த மக்கள் வாழும் இடமாகப் புகழ்பெற்றது. நாட்டுக்கு நல்லறிஞர்களையும், அரசியல், பொருளியல் மேதைகளையும் பெற்றுத் தந்த பெருமைமிக்கது.

கடலுக்கு மத்தியில் வீற்றிருக்கும் பூகோள அமைப்பினால், நீர்ப்பிரச்சினையும், போக்குவரத்துப் பிரச்சினையும் தீவுப்பகுதியைப் பெரிதும் பாதித்தன, பாதிக்கின்றன. அதனால் அப்பகுதியைச் சேர்ந்த மக்களில் பலர் அங்கிருந்து வேறு இடங்களுக்குக் குடிபெயர வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

எனினும் கடும் உழைப்புக்கும், முயற்சிக்கும் பெயர்பெற்ற அப்பகுதி மக்களில் பலர் தமது சொந்த மண்ணை விட்டுப் புறப்படவில்லை. தொழிலுக்காக மட்டும் தென்னிலங்கை போன்ற பகுதிகளுக்குச் சென்றனர்.

அந்த வாய்ப்புகள் இப்போது அடைக்கப்பட்டு விட்டன. கிளிநொச்சி, வவுனியா ஆகிய பிரதேசங்களில் நிம்மதியாக வாழ முடியாத நிலையில் தீவுப்பகுதி மக்கள் பலர் தமது சொந்த இடத்துக்குத் திரும்ப வேண்டியதாயிற்று.

இந்த நெருக்கடியான கால கட்டத்தில், வடக்கின் ஏனைய பகுதிகளைவிட தீவுப்பகுதி பெரிதும் இக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறது. குறிப்பாக பண்ணைத் தாம்போதியால் போக்குவரத்துத் தடைப்பட்டுள்ளதால் தீவுப் பகுதி மக்களின் நாளாந்த வாழ்க்கை ஸ்தம்பித நிலை அடையும் ஆபத்து ஏற்பட்டுள்ளது.

தீவுப்பகுதியும் குடாநாடும் துண்டிக்கப்பட்ட நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அதனால் இங்கிருந்து உணவுப் பொருள்கள் முதற்கொண்டு ஏனைய பாவனைப் பொருள்களை அங்கு எடுத்துச் செல்வதும், அப்பகுதி உற்பத்திப் பொருள்களை இங்கு கொண்டுவருவதும் அனேகமாகத் தடைப்பட்டிருக்கிறது. பெரும் கஷ்டங்களுக்கு மத்தியில் அப்பகுதி மக்கள் வாழவேண்டிய நிர்ப்பந்தம் உருவாகிவிட்டது.

இந்த வேளையில் அவர்களின் கஷ்டங்களை நீக்க, உழைப்பதற்கு முன்வந்தவர்கள் பாராட்டப்பட வேண்டியவர்கள். தங்கள் சொந்த மண்ணை, மக்களைக் காப்பாற்ற வேண்டும் என்ற உணர்வு தக்க தருணத்தில் அவர்களுக்கு உதித்திருப்பது நல்ல அறிகுறி.

தீவுப்பகுதியின் பூகோளத்தை நன்கு ஆராய்ந்து அப்பகுதியின் நிரந்தர பொருளாதார வளத்துக்கு வகை செய்யப்பட வேண்டும். அங்கு கிடைக்கும் மூல வளங்கள், கனியங்கள் கண்டறியப்பட வேண்டும். விவசாயம் செய்ய முடியாத நிலப்பகுதிகளில் பனை மற்றும் கடலை அண்டி வளரக்கூடிய தாவரங்களை வளர்த்து அவற்றைப் பெருந் தோட்டப் பயிர்களாக்கலாம். கடல் வளத்தைத் தக்கபடி பயன்படுத்தி கைத்தொழில் முயற்சிகளை ஆரம்பிக்கலாம். உல்லாசப் பயணத்துறையை அங்கு உருவாக்கி வளர்க்கலாம்.

தீவுப்பகுதி அபிவிருத்திக் கழகம் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த பலரின் முயற்சியால் உருவாக்கப்பட்டது. அதனால் அது நீண்டகால, குறுகிய காலத் திட்டங்களைத் தயாரித்து அந்தப் பகுதியின் வளத்துக்கு உரிய பங்கைச் செலுத்தும் என நம்பலாம்.

தீவுப்பகுதியில் மட்டுமன்றி, தமிழ்ப் பிரதேசங்களில் ஒவ்வொரு உதவி அரச அதிபர் பிரிவிலும் போதிருந்தே ஆக்கபூர்வமாக இயங்கக்கூடிய அபிவிருத்திக் கழகங்கள் அவசியம். அந்தந்தப் பகுதியின் வளங்களை அறிந்து, அவற்றைத் தக்கவாறு பயன்படுத்தி சம்பந்தப்பட்ட பகுதியின் பொருளியல் வளர்ச்சிக்கு இப்போதே அத்திவாரம் இடவேண்டும்.

அரசாங்க உத்தியோகம், தென்னிலங்கை வர்த்தகம் ஆகியன தமிழருக்கு இனி எட்டாத இராட்சைகள், மத்திய கிழக்கு வேலைவாய்ப்பும், ஐரோப்பிய "அடைக்கல" உழைப்பும் நிரந்தர மற்றவை. எமது மண்ணும் அதன் வளங்களும் தான் எங்களதும், வருங்காலச் சந்ததியினரதும் நிரந்தரச் செல்வங்கள்.

அதனை மனதிற்கொண்டு இப்போதே செயலில் இறங்க வேண்டும். வெறும் காகிதத் திட்டங்களும், வாய்ப்பந்தலும் வயிற்றுக்கு உதவா. முயற்சி, கடின உழைப்பு, மனஉறுதி ஆகிய மூன்றையும் அடித்தளங்களாகக் கொண்டு செயலில் இறங்க வேண்டும். அதுவே இன்றைய தேவை.

# சென்னை அருகில் கடற்படை ஒத்திகை

சென்னை, ஜூலை 15

சென்னைக்குச் சுமார் 50 கிலோ மீட்டர் தொலைவில் 'விக்ரோந்த்' விமானந் தாங்கிக் கப்பலும் மற்றும் நான்கு போர்க்கப்பல்களும் பல போர் ஒத்திகை நிகழ்ச்சிகளை நடத்தின.

மிக வேகமாகப் பாய்ந்து விரைந்து தாக்கும் விமானங்களைத் தாங்கிக் கொண்டிருப்பது 'விக்கிராந்த்' கப்பலின் சிறப்பு அம்சமாகும்.

தேவைவேற்படும் பொழுது செங்குத்தாய் எழும்பி தாக்குதலுக்கு விரைந்து செல்லும் 'ஸீ ஹரியர்' விமானங்கள் இதில் உள்ளன.

இவற்றிற்குத் துணையாக 'அலிஸ்' போர் விமானங்களும் எதிரியின் இலக்குகளைத் தாக்க சிறந்த போர்க் கருவிகளைக் கொண்டு செயல்படுகின்றன.

இப்படிப்பட்ட விமானங்களையும் இதர போர் சாதனங்களையும் கொண்டுள்ள போர்க்கப்பல்கள், நீர் மூழ்கிக்கப்பல்களால் ஏற்படும் ஆபத்தைக் கூட துல்லியமாக அறிந்து தவிர்க்க வல்லவை.

கடலின் ஆழத்திலுள்ள எதிரியின் இலக்குகளை குறிபார்த்து தகர்த்தல், வானத்தில் வட்டமிடும் எதிரியின் இலக்கினைத் துரத்தித் தாக்குதல், ஒரு கப்பலிலிருந்து மறு கப்பலுக்கு உணவுப்பொருள்களையும் வல்லுனர்களையும் அத்தியாவசிய வேளைகளில் மாற்றிக் கொள்ளல் என்பன இந்த போர் ஒத்திகையின் போது காண்பிக்கப்பட்டன.

(இ-ஒ)

### 8 மாதச் சிசு உயிர் தப்பிய அதிசயம்

டோக்யோ ஜூலை 15

ஜப்பானில் ஏற்பட்ட மண்சரிவில் சிக்குண்டு மரணமான ஒரு பெண்ணின் எட்டு மாதக் குழந்தை அப் பெண்ணின் மார்புடன் அணைக்கப்பட்ட நிலையில் உயிருடன் மீட்கப்பட்டது.

மண்ணால் மூடப்பட்ட நிலையில் ஆறு மணித்தியாலங்களுக்கு மேல் இக் குழந்தை இருந்துள்ள போதிலும் உயிர் தப்பியது அதிசயமான செயல் என சுகாதார வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-ஒ)

### வெளி உலகில்

### ஆபிரிக்காவில் ஆர்ப்பாட்டம்

கேப்டவுன், ஜூலை 15

தென் ஆபிரிக்காவில் நெருக்கடி நிலை நீடிக்கப்படுவதை ஆட்சேபித்து வெள்ளையரல்லாத மாணவர்கள் பாடசாலைகளைப் பகிஷ்கரித்து ஆர்ப்பாட்டம் செய்தனர்.

பள்ளிப் பருவ ஆரம்ப நாளான நேற்று பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் இந்த ஆர்ப்பாட்டங்களில் பல்வேறு இடங்களில் பங்கு பற்றினர். (இ-ஒ)

## செய்திச் சரம்

பெருந் தலைவர் காமராஜரின் 84 ஆவது பிறந்த நினைவு தினம் செவ்வாய்க்கிழமை சென்னையில் கொண்டாடப்பட்டது.

*

ஜப்பானிடமிருந்து தமிழக அரசு புதிதாக வாங்கியுள்ள கப்பலொன்றுக்கு 'தமிழ்க் காமராஜர்' எனப் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

*

தென்னை உற்பத்தியில் தமிழ்நாடு இந்தியா முழுவதிலும் இரண்டாவது இடத்தை வகிக்கின்றது.

*

அமரர் ஜெகஜீவன் ராமின் அஸ்தியின் ஒரு பகுதியடங்கிய கலசம் நேற்று ராமேஸ்வரத்தில் கரைக்கப்பட்டது.

*

கிறிஸ்துவுக்கு 800 ஆண்டுகளுக்கு முன்பட்டதானவை எனக் கருதப்படும் தங்க ஆபரணங்களை புதுவையில் அகழ்வாராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்தனர்.

*

எய்ட்ஸ் நோயைக் கட்டுப்படுத்தும் முதல் நடவடிக்கையாக அனுமதிப் பத்திரம் பெறாத சகல இரத்த வங்கிகளையும் மூடி விடும்படி தமிழ்நாடு சுகாதார அமைச்சர் டாக்டர் எச். வி. ஹண்டே அறிவித்துள்ளார்.

*

தெற்காசிய பிராந்திய மக்களின் நலன்களை முழு அளவில் பாதுகாக்க வேண்டிய தன் அவசியத்தை இந்தியாவும்—பங்களாதேஷும் வலியுறுத்தியுள்ளன.

*

குஜராத்தில் வன்முறைச் சம்பவங்கள் ஓய்ந்து நிலைமை கட்டுப்பாட்டுக்குள் வந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

*

இந்திய - பாகிஸ்தான் எல்லையில் பஞ்சாப், ராஜஸ்தான் மாநிலங்களில் எல்லை பாதுகாப்புப் படையினரிடம் சிக்கிய 6 பாகிஸ்தானியர் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

*

காமன்வெல்த் விளையாட்டுகளில் கலந்து கொள்வதை இந்தியாவும் தவிர்க்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. (இ-ஒ)

### கடலில் ஒத்திகை

திரிபோலி, ஜூலை 15

உக்கிரமான இராணுவ ஒத்திகை ஒன்றை சிதேவகுடாப் பகுதிகளில் லிபியா ஆரம்பித்தது.

மத்திய தரைக் கடல் பிரதேசமான சிதேவகுடாப் பகுதியில் இந்த ஒத்திகை மூன்று நாட்களுக்கு நடைபெறும்.

லிபியா இராணுவத்தினரின் போர் திறமையையும் கடுமையான சவாக்காத போராடும் முறையையும் இந்த ஒத்திகை எடுத்துக்காட்டும். (இ-ஒ)

## ஒத்தாரம்

என்ன, முரளியார்! சந்தையாலை வாறீர் போலை இருக்கு காய்கறி விலை எல்லாம் எக்கச்சக்கமாய் ஏறிவிட்டுது எண்டு வீட்டுக்காரர் சொன்ன ஞாபகம்

என்ன கத்தரிக்காய் ஒண்டுதானும் பத்துருபாவுக்குக் குறைஞ்ச மரக்கறி மற்றதெல்லாம் இருபது ரூபாவைத்தானும் எட்டி எட்டிப் பார்க்குதுகள்!

எங்கடை குடாநாட்டிலை விளையிற பொருள்களுக்கே உந்த ஏத்தம் எண்டால் பாருங்கோவன்.

வெங்காயம் அது இதுகள் கொழும்புக்கு போக முடியாமல் நஷ்டம் எண்டு சொல்லுகினம் ஆனால் இஞ்சை கொஞ்சம் விலை குறைச்சு விப்பினமோ எண்டு கேளுங்கோ...... அதுக்கு எங்கடை ஆக்களுக்கு மனம் வராது ..

எங்கடை ஆக்களுக்கு நியாய சிந்தையும் தாராள மனமும், வாறதுக்கு இன்னும் ஒருயுகம் மாற வேணும்.

கதை போட கதை பாதிலை நியன் இஞ்சை இருந்து போறவாறதுக்குப் போட்ட கட்டுப்பாடுகளாலை, எங்களுக்கு மட்டுமில்லை, தென்னிலங்கைக்காரருக்கும் பெரியநட்டம்; தெரியுமே உனக்கு!

ஒரு கிலோ அரக்குளா 125 ரூபா வெண்டும் ஒண்டுக்கும் உதவாத சூரைமீன் கிலோ 70 ரூபா எண்டும் விக்குதாம் கண்டியிலே. அதுக்குக் காரணம் என்ன சொல்லுகினம் தெரியுமே! வடக்கு, கிழக்கிலை இருந்து மீன் போகாதது தானும்.

தங்களின்ரை தன்லை கடும் சண்டைது உவைபருக்கு விளங்காது.

இப்பதான், வடபகுதி லொறி, பஸ் போக்குவரத்துக்கு விதிச்ச கட்டுப்பாடுகளை கொஞ்சம் குறைக்கிறது பற்றி யோசிப்பதாக நேற்றுக் கொழும்பில் ஒரு பெரிய அதிகாரி பேசிக்கொண்டதாகக் கேள்வி,

தெற்கிலை மீன்தட்டுப்பாட்டுக்கும், விலையேத்தத்துக்கும் வடக்கு- கிழக்கு மீன் வரத்துக் குறைவுதான் காரணம் எண்டு வெண்ணப்புவக்காரர் சொல்லியிருக்கினம். இஞ்சை மீன்பிடிக்கத் தடை விதிக்கயிக்கை அது அவருக்குக் 'கிளிக்' பண்ணயில்லைப் போலை பாவம்! அச்சாணியார் தடை போடப்போறன் எண்டால் இவர் என்ன செய்யமுடியும்?

வெண்ணப்புவக்காரர் மட்டும் இல்லை, எல்லா மந்திரிமாருக்குமே, இப்ப வடக்கு-கிழக்கும்,போராளிகள் நடவடிக்கைகளும் தான் "தபு" மடம். தங்கடை ஏலாத்தன்மை எல்லாத்தையும் அந்த இரண்டையும் காட்டித் தப்பி வருகினம்.

இ. போ. ச. லைவக்கல்க்கிறதுக்கு எம் எச். எம்மார் சொல்லுற காரணம்: வடக்கு, கிழக்கு போ. சபைகள் நட்டத்திலை ஓடுதுகள் எண்டது தான்

எய்ட்ஸ்நோய் கொழும்பிலை பரவுற அபாயம் எண்ட உடனை, அது வடக்கு, கிழக்காலைதான் வருகுது எண்டு பெரிய கண்டு பிடிப்புக் கண்டு பிடிக்கிறார் டாக்குத்தர் மந்திரி!

தமிழ் நாட்டிலை இருந்து போராளியள் மூலம் வடக்கே வந்து தான் கொழும்புக்கு அது போகுதாம். தங்கடை தெற்கிலை இருக்கிற உல்லாசப் பிரயாண ஹோட்டல்கள் தான் 'எயிட்ஸ்' பரப்பியல் எண்டதும் அங்கை வந்து போன வெளிநாட்டுக்காரர் தான் அந்த நோய் காவிகள் எண்டதும் அவருக்கு தெரியாமல் போகுமே...!

என்னத்துக்கும் வடக்கு, கிழக்கைச் சாட்டிச் சொல்லி தாங்கள் தப்புறதும், பழிபோடுறதும் தான் இப்ப மந்திரிமாற்றை வேலை..!

திண்ணைப் பேச்சு

# இனப்பிரச்சினைக்கான தீர்வுக்கு சில யோசனைகள்

சமூக சிந்தனைகள்

கட்டுரையாளர் ஸ்ரீ. கு. பேராசிரியர் ஏ. ஜே. வில்சனின் மாணவன் சர்வதேச விவகாரங்களில் பட்டமேற்பட்டம் பெற்றவர்.

இக்கட்டுரையில் உள்ள கருத்துக்கள் கட்டுரையாளரின் தனிப்பட்ட கருத்துக்கள் ஆகும். - ஆசிரியர்.

-1-

வரலாற்றுக் காலத் தொடக்கம் இந்நாட்டின் வாழ்வோடும், தாழ்வோடும் சிங்கள மக்கள் கொண்டிருந்த அதே அளவு தொடர்புகளைத் தமிழ்மக்களும் கொண்டிருக்கிறார்கள்.

பின்னர் வந்த முஸ்லிம் மக்களும், பெருந்தோட்டத்துறையின் பசளையான இந்தியத் தொழிலாளர்கள் இந்நாட்டின் வளர்ச்சிக்கு அதிகமாகப் பாடுபட்டிருக்கிறார்கள்.

இலங்கைக்குக் கிடைத்த சுதந்திரம் பெரும்பான்மை இனத்துக்கு மற்றவர்களை அடிமையாக்கிவிட்டது. ஆட்சியில் சிறுபான்மை மக்களுக்கு வழங்கப்பட வேண்டிய நீதி மறுக்கப்பட்டுவிட்டது.

அடக்கு முறைக்கும் அநீதியான தீர்மானங்களுக்கும் சிறுபான்மை மக்கள் பலிக்கடாவாக்கப்பட்டார்கள். பாகிஸ்தான் வங்காளத்தை அடக்கி ஆண்டதற்கும், தென் ஆபிரிக்க சிறுபான்மை வெள்ளையர் பெரும்பான்மைச் சுதேசிகளைக்கொடுமைப் படுத்துவதற்கும் இலங்கை நிலைமைகளுக்கும் அத்தனை வேறுபாடுகளில்லை.

### புரியாத இராஜதந்திரம்

இலங்கையிலே பெரும்பான்மையினரால் தோற்றுவிக்கப்பட்ட பிரச்சினைகளைத் தீர்த்து வைக்க வேண்டும் என்ற இதயபூர்வமான விருப்பம் அவர்களிடம் என்றும் இருந்ததில்லை பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினைகளைத் தீர்த்துவைக்கும் உயர்ந்த ராஜதந்திரம் அவர்களுக்குப் புரியாததொன்று.

1983இல் இந்திய அரசின் நேரடித் தொடர்பினாலேதான் பேச்சுவார்த்தைக்கு விருப்பமில்லாத இணக்கம் ஏற்பட்டது. ஆண்டுபழகி விட்டதுகள். அதிகாரங்களைக் கைவிட ஒரு துளியும் விரும்பவில்லை பௌத்தமும்— சிங்களமும் — அரசாங்கமும் ஒன்றே என்று நிரூபிக்கப்பட்டுவிட்டது.

இலங்கையில் சுதந்திரத்திற்குப் பின் சிங்கள மக்கள் பெற்ற சுதந்திரமும், சிறுபான்மை மக்கள் பெறாத சுதந்திரமும் சேர்ந்து தீவிரவாதம், என்ற குழந்தையைப் பெற்றனர்.

பெற்றோருக்கும், ஆசிரியர்களுக்கும், மூத்தவர்களுக்கும் காலாகாலமாகக் கைகட்டிச் சேவகம்புரிந்த அடங்கும் குணம் படைத்த சிறுபான்மை இனத்தின் இளைஞர்கள் நாளாம் மாடியாலும் இனதரப்படுத்தலாலும் இன ஒதுக்கல்களாலும் இனப் படுகொலைகளாலும் ஆயுதமேந்த நிர்ப்பந்திக்கப்பட்டார்கள்.

புத்த சன்னத்தராக அவர்கள் பிறக்கவில்லை ஆனால் சூழ்நிலைகள் அவர்களுக்குப் புதிய வலிய தோற்றத்தை அளித்துள்ளன.

அவர்கள் தாம் இறவாப் பெரும்புகழ்படைத்தவர்களெனப் பிரகடனம் செய்துள்ளவர். கருவறையிலிருந்து கல்லறைக்குச் சென்று இருந்தவாசகத்தைக் 'கருவறையிலிருந்து கருவறைக்கே' என மாற்றியுள்ளார்கள்; அதாவது போராளிகள் இடைவிடாது இருந்து கொண்டே இருப்பர் என்கிறார்கள்; மீண்டும் மீண்டும் பிறப்பார் என்கிறார்கள்.

இராணுவக் கொடுந்தீர்வுகள் அப்பாவிகள் பலரை முடித்தது மாத்திரமன்றி அப்பாவிகள் பலரை ஆயுதமேந்தவும் தூண்டுகின்றன. இலங்கை அரசாங்கம் அரசியல் தீர்வு காணுவதில் கற்பு நெறி படைத்ததல்ல இந்தியாவின் ஈடுபாடு உள்ளதன் விளைவாகவே பேச்சுவார்த்தை என்பதைப் பற்றி மக்கள் கவனத்தில் கொள்கிறார்கள்.

ஆனால் தீர்மானங்களை நிறைவேற்றச் செய்வதிலும், செயலாக்குவதிலும் தடைகள் ஆயிரமாயிரம் உண்டு. இருப்பினும் பெரும்பான்மையுடன் உள்ள அதி உத்தமனுடன் அரச நேர்மையான தீர்மானங்களை எடுத்துச் உடனடியாகச் செயற்படுத்தும் தன்மைக் கொண்டிராதிருக்குமாயின் போராட்டம் ஓய்ந்துவிடாது! ஆறுதல் பின்னோக்கிப் பாய்வதில்லை எடுக்கப்படுகின்ற முடிவுகள் தெற்கின் கட்சி அரசியல் ஆதாயத்திற்காக உருவாக்கப்பட்ட பிரச்சினைகளுக்கு முடிவு கட்டுவதாக அமையவிடின் அவை சிறுபான்மை மக்களால் ஏற்றுக் கொள்ளப்படுவதற்கில்லை. குறைபாடுகள் அவர்களுக்கே அதிகம்.

நிரந்தர தீர்வினை நோக்கி அரசாங்கம் பின்வருவனவற்றைச் செய்யுமா?

(i) இலங்கை அரசு மதச் சார்பற்ற அரசெனப் பிரகடனப் படுத்தல் மதகுருமார் அரசியலில் பகிரங்கமாக ஈடுபடுதலைத் தடுத்தல்.

(ii) சிங்களத்தையும் தமிழையும் அரசாங்க மொழிகளாகவும் ஆங்கிலத்தை இணைப்பு மொழியாகவும் பிரகடனம் செய்தல்.

(iii) இலங்கையில் வாழ்ந்துவருகின்ற சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் அனைவரதும் தாய் நாடு இலங்கை எனப் பிரகடனப் படுத்துதல்.

(iv) சுதந்திரம் பெற்ற காலத்தின் அடிப்படையில் இருந்த மக்கள் தொகை அமைப்புக் கிணங்க (அரசக்குடியேற்றங்கள் பரவலாக முன்னர்) மாகாணங்களை மொழிவாரியாக இணைத்து சுயாட்சி உரிமை வழங்குதல். மலையக மக்களுக்கு ஆட்சியில் சுதந்திரமாகப் பங்கெடுக்க விசேடவாய்ப்புக்கள் செய்தல்.

"வளர்ந்துவரும் தேசிய இன உணர்ச்சி தோன்றுமையான எல்லைக்கோடு காரணமாகவும், பூகோளத் தொடர்பு காரணமாகவும் ஏற்படவில்லை; தாய்மொழிகள் காரணமாகவே ஏற்பட்டிருக்கிறது" என்று வரலாற்றுளர் ஏ ஜே ரொபின்சி எடுத்துக் காட்டியதையும் இங்கே குறிப்பிட வேண்டும்.

-2-

உத்தேசிக்கப்பட்டுள்ள உப தேசிய பிரிவுகள்

1 அரசியல் யாப்பில் ஒற்றையாட்சியோ, சமஷ்டியோ என்ற வாசகம் அகற்றப்படுவதாக அரசியல்யாப்பு பிரதேச எல்லைகளை உறுதிப்படுத்த வேண்டும்.

2. பிரதேசங்களுக்கும் மத்தியிலுள்ள அரசாங்கத்திற்கும் உள்ள அதிகாரங்கள் மிகத் தெளிவாக யாப்பில் வரையறுக்கப் படவேண்டும். இரண்டுக்கும் பொதுவானவையாக இருக்க வேண்டிய விடயங்களைப் பொறுத்துத் தெளிவான வரையறை இருக்கவேண்டும்; ஏனெனில் இதனால் பல நடுகளில் மத்திய அரசு மாநிலங்களைக் குறையாடியுள்ளது. மத்தியிலுள்ள அமைச்சர் தொகை குறிக்கப்பட வேண்டும்

3 பிரதேச கவர்னர்கள், அப்பிரதேசத்தின் முதலமைச்சரின் சிபாரிசின் பேரில் ஜனாதிபதியால் நியமிக்கப்படுதல் வேண்டும் (சோல்பரி அரசியல் யாப்பின் ஆளுநர் நாயகத்தின் நியமனம் போல) இவர் பிரதேச—மத்திக் கிடையிலான இணைப்பாளராகவும் நேரடியாக கட்சி சார்பற்ற பொதுவானவராகவும் இருப்பர்.

4 வலுவகுப்பின் கீழுள்ள பிரதேச சட்டவாக்க அதிகாரம் பிரதேச சட்டசபைக்கும், சட்டசபைச் சபாநாயகருக்கும் மாத்திரம் தொடர்புள்ளதாக இருக்க வேண்டும்.

5. நிறைவேற்றுஅதிகாரம்: பிரதேச முதலமைச்சருக்கும், அமைச்சரவைக்கும், முதலமைச்ச

(4 ஆம் பக்கம் பார்க்க)

ஸ்ரீ. கு.

### தெல்லியூர் அண்ணமார் ஆடிப்பிறப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 16

தெல்லிப்பளை கோவிற்புலம் அண்ணமார் ஆலயத்தில் ஆடிப்பிறப்புப் பூசை நாளை வியாழக்கிழமை நடைபெறும்.

இதனை யொட்டி விசேட அபிஷேகமும், சமயச் சொற்பொழிவும் ஆலய பரிபாலனசபையால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (இ-ஒ)

### எழிலூர் வேளாங்கண்ணி உற்சவாரம்பம்

கொழும்புத்துறை, ஜூலை 16

எழிலூர் அன்னை வேளாங்கண்ணி மாதா ஆலய வருடாந்த உற்சவம் நாளை 17 ஆம் திகதி வியாழக்கிழமை ஆரம்பமாகின்றது

அருட்தந்தை கிரலின் லாஸ் அடிகள் தலைமையில் நாளை நண்பகல் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

20 ஆம் திகதி காலை திருப்பலிப் பூசையும் அன்னையின் திருச்சுருப சுற்றுப் பிரகாரமும் இடம்பெறும். (இ-ஒ)

[illegible]

குறள்:

இலன் என்று தீயவை செய்யற்க செய்யின்
இலனாகும் மற்றும் பெயர்த்து.

பொருள்:

'யான் வறியவன்' என்று நினைத்துத் தீய செயல்களைச் செய்யக் கூடாது; செய்தால் மீண்டும் வறியவன் ஆகி வருந்துவான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ வர்ணப் புகைப்படப் பிரதி ஒன்று ரூ. 5/-
(Post Card Size 3R 3 1/2" x 5")
★ Processing Free
★ விற்பனை வர்ண புகைப்படச் சுருள்கள்
SAKURA - TUDOR - KONICA
ஆர்த்தி ஜுவலல்ர்ஸ்
111, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23628

# உதயன்

16 07 1986 புதன்கிழமை

உங்களை அழைக்கின்றது
ஆர்த்தி ஜுவலல்ர்ஸ்
✱ தரமான வர்ணப் புகைப்படப் பிரதிகள்
✱ கம்பியூட்டர் முறையில்
✱ குறைந்த செலவில்
✱ சிறந்த சேவையில்
பெற்றுக்கொள்ள நாடுங்கள்.

# கிழக்கு காணிப் பங்கீடு
# 1956 விகிதாசாரப்படி
# அமைய வேண்டும்

## ஜனாதிபதியிடம் மஜீத் கோரிக்கை

கொழும்பு, ஜூலை 16
கிழக்கு மாகாணத்தில் எதிர்காலத்தில் இடம்பெறும் காணிப்பங்கீடு 1956இல் இருந்த இன விகிதாசாரத்திற்கேற்ப அமையவேண்டும்.

பிரதிஅமைச்சரும் சம்மாந்துறை எம். பியுமான ஜனாப் எம். ஏ. அப்துல் மஜீத் ஜனாதிபதியை மேற்கண்டவாறு கேட்டுள்ளார்.

மாகாணசபை யோசனை சம்பந்தமாக அமைச்சர் ஜனாதிபதியை முஸ்லிம்லீக் தூதுக் குழு சந்தித்தது தெரிந்ததே. அக்குழுவில் ஜனாப் அப்துல் மஜீதும் ஒருவர்.

கிழக்கு மாகாணக் காணிப்பங்கீடு பற்றி ஜனாதிபதியிடம் கருத்து வெளியிட்டபோதே ஜனாப் மஜீத் 1956 இன விகிதாசாரத்தைக் கடைபிடிக்க வேண்டிய அவசியத்தை வலியுறுத்தினர்.

கிழக்கு மாகாணத்தில் இதுவரை இடம்பெற்ற காணிக்குடியேற்றத் திட்டங்களில் முஸ்லிம்களுக்கு உரிய விகிதம் வழங்கப்படவில்லை.

1956இல் இருந்த முஸ்லிம்கள் தங்களுக்கு உரிய காணிகளில் இருந்து வெளியேற்றப்பட்டும் உள்ளார்கள்.

வருங்காலத்தில் திருமலை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் இடம்பெறும் காணிக் குடியேற்றங்கள் 1956இல் இருந்த இன விகிதாசாரத்துக்கு ஏற்ப இடம்பெறவேண்டும்.

இப்படி ஜனாப் மஜீத் தெரிவித்தார். (இ-எ)

நாயன்மார்கட்டு ஆலயம்

## தேவி எழுந்தருளும் வாகனம் சிங்கமா? இடபமா?

### 2 வருட சர்ச்சை தீர்ந்தது

யாழ்ப்பாணம், ஜூலை16
நாயன்மார்கட்டு ஸ்ரீ ராஜராஜேஸ்வரி பேச்சியம்மன் ஆலயக் கொடியேற்ற வைபவத்தின் போது தேவி எழுந்தருளி வரும் வாகனம் சிங்கமா, இடபமா என்பது பற்றிய இரண்டு ஆண்டு கால சர்ச்சைக்கு பொது மக்கள் தீர்ப்பளித்தார்கள்

13. 7. 86 இல் நடந்த விசேட கூட்டத்தில் இது பற்றி ஆராயப்பட்டு இடபம் என்று தீர்ப்பளிக்கப் பட்டது.

வியாகரண சிரோன்மணி பிரம்மஸ்ரீ தி. கி. சீதாராம சாஸ்திரிகள், பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், சைவக் குருமார்கள் ஆகியோரிடம் இருந்து பெற்ற அறிவுரையைக் கொண்டு ஆலய பரிபாலன சபை எடுத்த தீர்மானம் நெறிமுறைச் செயலாகும் என்று கூட்டத்தில் கலந்துகொண்ட பக்தர்கள் தெரிவித்தனர்.

எதிர்வரும் 29 ஆம் திகதி நாயன்மார்கட்டு ஸ்ரீ இராஜராஜேஸ்வரி பேச்சியம்மன் ஆலய கொடியேற்ற விழா நடைபெறுகிறது (இ-எ)

### காணவில்லை

கன்னியாவைச் சேர்ந்த இராசதுரை ஆனந்த குமாரை காணவில்லை. வயது 18 கருப்பு நிறம். கடைசியாகக் காணப்படும் போது மண் நிற சேட்டும், சிவப்பு நிற சாறச்சட்டையும் அணிந்திருந்தார். கண்டவர்கள் கீழ்க்காணும் முகவரியுடன் தொடர்பு கொள்ளும்படி வேண்டுகின்றேன்.

இராசதுரை சிவகுமார்
பாடசாலை ஒழுங்கை,
3 கண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.

## அறிவித்தல்



நியூஊசன் அமைப்பாளராக இதுகாலவரை கடமையாற்றி வந்த நான் அவ்விஸ்தாபனத்திலிருந்து விலகி றஹுமத் ரெயிலர்ஸ் என்னும் ஸ்தாபனத்தை ஆரம்பித்துள்ளேன் என்பதை எனது வாடிக்கையாளர்களுக்கும் என் நண்பர்களுக்கும் அறியத் தருகிறேன்.

றஹுமத் ரெயிலர்ஸ்
(மலாயன் கபே முன்பாக)
5, பெரியகடை, யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சாரநிலைய வீதி, இரண்டாவது ஒழுங்கை 15-ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட், ஸ்தாபனத்தாரால் அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி 16—07—1986.

Printed and Published by Uthayan Publications (Private) Ltd, 15 Second Lane, Power House Road. JAFFNA.

Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka Under Number QJ 60 No86.

## றேகனின் கடிதம் பத்திரிகைகளுக்கு கொடுக்கப்பட்டது ஏன்?

### அமெ: ராஜதந்திரிகள் சீற்றம்

புதுடில்லி ஜூலை15
அமெரிக்க அதிபர் றேகனின் கடிதத்தை ஜனாதிபதி ஜெயவர்த்தன பத்திரிகைகளுக்கு வெளியிட்டது குறித்து அமெரிக்க ராஜதந்திரிகள் எரிச்சலடைந்திருப்பதாக 'இந்து' செய்தி வெளியிட்டுள்ளது.

கொழும்பில் உள்ள இராஜதந்திர வட்டாரங்களை ஆதாரங்காட்டி 'இந்து' செய்தி வெளியிட்டுள்ளது.

பத்திரிகைகளில் பிரசுரிப்பதற்காக அதிபர் றேகன் தனது கடிதத்தை அனுப்பவில்லை. அப்படித்தான் பிரசுரிப்பதற்கு இலங்கை தீர்மானித்திருந்தால் அதுபற்றி அமெரிக்காவுக்கு முன்கூட்டியே அறிவிக்கப்பட்டிருக்க வேண்டும்.

இப்படி கொழும்பில் உள்ள அமெரிக்க ராஜதந்திரிகள் கருத்துத் தெரிவித்தனர் என்று 'இந்து' செய்தி மேலும் கூறியது. (இ-எ-2)

### நூல் நிலைய கிளை திறந்து வைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை16
யாழ் பொது நூலகத்தின் 5 ஆவது கிளை முஸ்லிம் கல்லூரி வீதியில் இன்று புதன்கிழமை மாலை 4 30 மணியளவில் திறந்து வைக்கப்படும்.

யாழ் மாநகர ஆணையாளர் திரு. சி. வி. கே. சிவஞானம் இதனைத் திறந்துவைப்பார். (இ-எ)

### வடக்கு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
யது ஆகியன குறித்த புள்ளி விவரங்களுடன் கூட்டணிக்குழு ஜனாதிபதியிடம் எடுத்துச் சொன்னது.

அப்பாவி மக்களைக் கொன்றுவிட்டு தீவிரவாதிகளைக்கொன்று விட்டதாகக் கூறப்பட்ட பல சம்பவங்களை ஜனாதிபதிக்கு இவர்கள் புள்ளி விவரங்களுடன் சமர்ப்பித்தனர்.

கடந்த ஞாயிறு அம்பனில் அப்பாவித் தமிழர் கொலைப்பட்டனர் என்றும் குழு சுட்டிக்காட்டியது.

தேவையான நடவடிக்கைகள் எடுப்பதாகக் குழுவுக்கு ஜனாதிபதி உறுதி அளித்தார் என்று தெரியவருகிறது. (அ-எ)

### யாழ் செயலகம்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
நிறுத்தம் நடந்து இன்றுடன் ஆறு வருடங்கள் பூர்த்தியாகின்றன.

இன்றும் கூட பல்லாயிரக்கணக்கான வேலை நிறுத்தம் செய்த போராட்டக்காரர்கள் வாழ வழியின்றித் துன்பம் அனுபவித்துக் கொண்டிருக்கின்றனர்.

பலர் தற்கொலை செய்து கொண்டும் உள்ளனர்.

ஆகவே தொழிலாளர்களின் ஐக்கியத்தைப் பலப்படுத்துவதுடன் 1980 ஜூலை வேலைநிறுத்த நோக்கங்களை சட்டேற்ற அனைவரும் ஒன்றிணைந்து செயல்படுவோம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-10)

### குழுநிலையில்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)
தாகக் கூறப்பட்டதை ஆட்சேபித்தார் திரு. குமார் பொன்னம்பலம்.

வடக்கு-கிழக்கு இணைப்பு, குடியேற்றத் திட்டங்கள், மொழி ஆகிய முக்கிய கொள்கைகள் குறித்து அரசியல் கட்சிகள் மாநாட்டில் முடிவு செய்யப்பட்ட பின்னரே குழு நிலை ஆய்வு தொடங்க வேண்டும்.

இப்படி திரு குமார் பொன்னம்பலம் வலியுறுத்தினர்.

இலங்கை அரசு ஒரு பக்கத்தில் கூட்டணியுடனும் இந்திய அரசுடனும் பேச்சுக்களை நடத்துகின்றது.

மறுபக்கத்தில் அரசியல் கட்சிகள் மாநாடு நடத்துகின்றீர்கள். முதலில் கூட்டணி—இந்திய அரசுடன் நடத்தும் பேச்சுக்களை முடித்துக் கொண்டு அரசியல்கட்சி மாநாட்டை நடத்துங்கள் — இப்படி திரு. குமார் பொன்னம்பலம் சொன்னார்.

இதனை கம்யூனிஸ்ட் கட்சி, நவ சமசமாஜக் கட்சிப் பிரதிநிதிகளும் ஆதரித்தனர். (இ-எ)

### சிப்பாய்கள்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)
தனர்.

இரண்டரை மணிநேரம் எமது உக்கிரத் தாக்குதலின் பின்பு நிலை கொள்ள இயலாத இராணுவத்தினர் தமது இழப்புகளுடன் மீண்டும் முகாம் திரும்பினர்.

இத்தாக்குதலின் போது எமது தரப்பில் எதுவிதமான இழப்புகளும் ஏற்படவில்லை

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது. (இ)

## இனப்பிரச்சினை...

(-3ம் பக்கத் தொடர்ச்சி)
ரின் சிபாரிசிலான கவர்னருக்கும் இடையிலான தாக இருக்க வேண்டும். (கவர்னர் நிருவாகத் துறையுடனேயன்றிச் சட்ட வாக்கத் துறையுடன் தொடர்பற்றவர். வேண்டுமானால் சட்ட சபைக்குச் செய்திகளை அனுப்பலாம்)

6. பிரதேச நீதி நிருவாகம்: முதலமைச்சர்களின் சிபாரிசுகளுடன் கவர்னர்களினால் நியமிக்கப்படும் பிரதேச நீதி சேவை ஆணைக்குழுவினால் கட்டுப்படுத்தப்பட வேண்டும். உச்ச நீதிமன்றம் மத்தியில் இருப்பதுடன் அது அரசியல் யாப்புடன் தொடர்புபட்ட மத்தி—பிரதேச வழக்குகளுக்குத் தீர்ப்பளிப்பதாகவும், அரசியல் யாப்பின் காவலனாகவும் இருக்கவேண்டும்.

7. கொழும்பு நகர் மாந்திரம் (ஐக்கிய அமெரிக்காவிலுள்ள ஐ. நா. தாபனப் பிரதேசம் போல) மத்திய அரசாங்கத்துக்குச் சொந்தமான தாக பொதுப் பிரதேசமாக இருக்க வேண்டும். மற்றைய உள்ளூராட்சி அமைப்புக்கள் அனைத்தும் பிரதேச அரசாங்கத்தின் கட்டுப்பாட்டின் கீழ் வரவேண்டும் வர்த்தக வலயம் போன்றவற்றில் பிரதேச சபையின் அமைச்சரவைக்குப் பிரதிநிதித்துவம் இருக்க வேண்டும்.

8. மத்தியில் திட்டமிடல் ஆணைக்குழு நிரந்தரமாக இயங்க வேண்டும். பிரதேசங்களின் முதலமைச்சரும், திட்டமிடல் அமைச்சரும், ... வர் மத்திய திட்டமிடல் ஆணைக்குழுவின் உறுப்பினராக இருத்தல் வேண்டும் ஜனாதிபதி தலைமை வகிப்பார்.

9 பிரதேசங்களுக்கு மேலதிக நிதியை ஒதுக்கீடு செய்வதற்குள்ள நிதிக்குழுவானது இலங்கையிலுள்ள சகல இனத்தவர்களது பிரதிநிதிகளையும் கொண்டிருத்தல் வேண்டும். நிதிக்குழு நிதி ஒதுக்கீடு செய்வதற்குரிய சூத்திரம் அரசியல் யாப்பில் வரையறுக்கப் படுதல் வேண்டும். இதன் அங்கத்தவர்களும் திட்டமிடல் ஆணைக் குழுவில் இடம் பெற வேண்டும்.

10. பிரதேசசபைகள் தொடர்பான யாப்பு மாற்றம் சிறுபான்மை மக்களது பிரதேச சபைகளின் சம்மதத்துடனேயே செய்யப் படுதல் வேண்டும்.

11. பிரதேச சபைகள் அரசியல் யாப்புக்கு அமைவு பட்டவகையில் இறைமைபடைத்த தாபனங்களென உறுதிப் படுத்தப்படல் வேண்டும்.

12. தேசியமட்ட நிருவாகத்தில் இனவிகிதாசாரத்தை உறுதிப்படுத்தும் பணிக்கு, நியமனங்களை அனுமதிக்கும் அதிகாரமுள்ள எல்லா இனங்களையும் பிரதிநிதித்துவப் படுத்தும் அதிகார சபை ஒன்று உருவாக்கப்படுதல் வேண்டும். (சிவில்; இராணுவ நியமனங்கள்)

நீதியான அமைப்பொன்றின்றாகத் தமது உயிரையே தியாகம் செய்யத் துணிந்த போராளிகள் ஆட்சி அமைப்பிலும், தொழில் வாய்ப்பிலும் சரிசமான ... தாளம் காவல் நிராகவே இருக்கும். (இ)

# விளையாட்டரங்கு

அரை இறுதி ஆட்டம்

## சென். ஜோன்ஸ் வெற்றி

### இறுதியாட்டம் யாழ் இந்துவுடன்

— விளையாட்டுச் செய்தியாளர்;- எஸ் ஜே. —

யாழ்ப்பாணம், ஜூலை 16
யாழ் மாவட்ட பாடசாலை கிரிக்கெட் அணிகளுக்கிடையே நடைபெற்று வரும் கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் நேற்றைய அரை இறுதி ஆட்டம் ஒன்றில் சென் ஜோன்ஸ் கல்லூரி அணி வெற்றியீட்டியது.

இதன் மூலம் இந்த அணி இறுதியாட்டத்தில் ஆட தகுதி பெற்றுள்ளது.

இந்த அணி யாழ் மத்திய கல்லூரி அணியை 10 விக்கெட்டுக்களால் வென்றது

சென் ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியில் மத்திய கல்லூரி அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

இந்த அணியின் விக்கெட்டுக்கள் முதலில் மளமளவென சரிந்த போதிலும் இறுதிச் சோடி சிறப்பாக ஆடியதன் மூலம் 35 ஓட்டங்களைச் சேகரித்தது.

இறுதியில் இந்த அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 100 ஓட்டங்களைப் பெற்றது.

கே. குணரத்தினம் ரி. உமாசங்கர் ஆகியோர் முறையே 32, 20 ஓட்டங்களையும், எஸ். ரமேஷ் ஆட்டமிழக்காமல் 14 ஓட்டங்களையும் பெற்றனர்.

ரி. அகிலன், ரி. நரேஸ், ரி. சஞ்சீவன், பி ரவிராஜன் ஆகியோர் முறையே 4, 3, 2, 1 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய சென் ஜோன்ஸ் அணி, சகல விக்கெட்டுக்களையும் இழந்து 164 ஓட்டங்களைப் பெற்றது.

என். சுதேசன் 38 ஓட்டங்களையும், எஸ். என். புவனரத்தினம், ரி. சஞ்சீவன் ஆகியோர் தலா 27 ஓட்டங்களையும் பெற்றனர்.

பி. முரளிதரன், ரி. சுதாகர் ஆகியோர் முறையே 4, 2 விக்கெட்டுக்களையும் பி. சாயீஸ் கந்தன், எஸ் ரமேஷ் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இன்னிங்ஸ் தோல்வியைத் தவிர்க்க 65 ஓட்டங்களைப் பெறவேண்டிய நிலையில் இரண்டாவது இன்னிங்ஸிற்காக மத்திய கல்லூரி அணி துடுப்பெடுத்தாடியது

இந்த அணி 72 ஓட்டங்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

ஜி. விக்னேஸ்வரன் 26 ஓட்டங்களைப் பெற்றார்.

சிறப்பாகப் பந்து வீசிய பி. ரவிராஜன் 15 ஓட்டங்களுக்கு 8 விக்கெட்டுக்களையும் எஸ் ஜெயசங்கர் 1 ஓட்டத்திற்கு 1 விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இரண்டாவது இன்னிங்ஸில் சென் ஜோன்ஸ் அணி வெற்றிக்குத் தேவையான 9 ஓட்டங்களைப் பெற துடுப்பெடுத்தாடி விக்கெட் இழப்பின்றி 11 ஓட்டங்களைப் பெற்றது.

சென் ஜோன்ஸ் அணி ஏற்கனவே அரை இறுதியாட்டத்தில் வெற்றி பெற்ற யாழ் இந்துக் கல்லூரி அணியுடன் இறுதியாட்டத்தில் மோதும். (இ-7)

மூன்றும் பிரிவு

## ஒஸ்மானியா வெற்றி

யாழ்ப்பாணம், ஜூலை 16
யாழ் கல்வித் திணைக்களம் நடத்தும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் ஒஸ்மானியா கல்லூரி அணி, வெற்றிபெற்றது.

இந்த அணி யாழ் இந்துக் கல்லூரி அணியை இறுதியாக வழங்கப்பட்ட பனல்டி உதைகள் மூலம் 3-1 என்ற கோல் அடிப்படையில் தோற்கடித்தது.

மூன்றும் பிரிவிற்கான இந்தப் போட்டியில் முதலில் இருஅணிகளும் தலா ஒரு கோல் போட்டதால் இறுதியில் பனல்டி உதைகள் வழங்கப்பட்டன.

ஒஸ்மானியாக் கல்லூரியின் சார்பில் எஸ் ஏ. சி. எம். ஜாயிஸ், எச் எல். எம். ஹசன் றிஸ்வி, ஐ. எம். சுகைல் ஆகியோர் தலா ஒரு கோலையும், யாழ் இந்து சார்பில் பி பிரதீபன் ஒரு கோலையும் போட்டனர். (இ-7)

## புங்குடுதீவு நசரேத் 'ஏ' அணி

### சாம்பியனாகியது

யாழ்ப்பாணம், ஜூலை 16
வேலணை திருவள்ளுவர் சனசமூக நிலையம் நடத்திய உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் புங்குடுதீவு நசரேத் விளையாட்டுக்கழக 'ஏ' அணி சாம்பியனானது.

திருவள்ளுவர் சனசமூக நிலைய 28 ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு இப் போட்டி நடத்தப்பட்டது.

இந்த இறுதிப் போட்டியில் நசரேத் விளையாட்டுக்கழக 'பி' அணியை அதே விளையாட்டுக்கழக 'ஏ' அணி 1—2 என்ற கோல் அடிப்படையில் வென்று சாம்பியனானது.

இந்த உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் 29 விளையாட்டுக்கழக அணிகள் பங்குகொண்டமை குறிப்பிடத்தக்கது

திருவள்ளுவர் சனசமூக நிலையம் நடத்தும் தாச்சிப் போட்டி எதிர்வரும் சனிக்கிழமை நடைபெறும்.

திருவள்ளுவர் சனசமூக நிலைய விளையாட்டு மைதானத்தில் நடைபெறும் இந்த போட்டியில் 16 விளையாட்டுக் கழக அணிகள் பங்கு கொள்கின்றன (இ-எ)

இலங்கையின் புதிய யோசனைகள்

## கூட்டணியின் நிலை குறித்து பிரபா

புதுடில்லி, ஜூலை 15
இலங்கை அரசின்புதிய யோசனைகள் குறித்து தமிழர் விடுதலைக் கூட்டணி மகிழ்ச்சி கொண்டிருப்பதாகத் தெரியவில்லை.

இப்படி தமிழீழ விடுதலைப்புலிகள் தலைவர் திரு. வே. பிரபாகரன் புதுடில்லியில் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இந்தியாவின் புதிய முயற்சிகள் குறித்து எமது இயக்கம் பொறுத்திருந்து பார்க்கும்.

போராளிகளுக்கும் ஆயுதப் படையினருக்கும் இடையே யுத்த நிறுத்தம் ஒன்றைக் கொண்டு வரும் முயற்சிகள் எதுவும் தற்சமயம் மேற்கொள்ளப்படவில்லை.

கொழும்பில் புதிய பேச்சுக்கள் நடக்கும் சமயமே அப்பாவித் தமிழர்கள் கொல்லப்படுகின்றனர் ... இப்படிச் சொன்ன திரு. பிரபாகரன் இலங்கை அரசின் புதிய யோசனைகள் குறித்து கருத்து வெளியிட மறுத்துவிட்டார்.

தமிழீழ மக்கள் விடுதலைக்கழகத் தலைவர் திரு. க. உமாமகேஸ்வரன் கருத்துத் தெரிவிக்கையில், 'சமஷ்டிக் கொள்கை அடிப்படையில் இலங்கை அரசியல் அமைப்பில் மாற்றம் செய்யப்பட வேண்டும்.

தோட்டத் தொழிலாளர் வாழும் பகுதிகளில் சுவிஸ் அமைப்பிலான 'கான்டன்'கள் நிறுவப் படவேண்டும்'— என்று சொன்னார்.

திம்புவில் சமர்ப்பிக்கப் பட்ட 4அம்சக் கோரிக்கைகளின் அடிப்படையில் பேச்சுக்கள் நடத்தப் படவேண்டும் என்று ஈழம் தேசிய விடுதலை முன்னணித் தலைவர்கள் சொன்னார்கள். (இ-எ-8)

ROCK
Engineers & Contractors
Water Supply &
Building Works

குழாய்க் கிணறுகள்
(இயந்திரங்கள் மூலம்)

யாழ்ப்பாணக் குடா நாட்டுக்குள் உள்ள எந்த இடத்திலும் சரி

24 மணித்தியாலங்களுக்குள்

குழாய்க் கிணற்றை அமைத்துத் தண்ணீரும் பெற்றுத் தருவோம்.

தோட்டத் தேவையாகவும் இருக்கலாம். வீட்டுத் தேவையாகவும் இருக்கலாம். எமது ஒரு குழாய்க் கிணற்றிலிருந்து குறைந்தது 5 ஏக்கர் நிலத்தில் பயிர் செய்யலாம்.

குழாய்க் கிணறுகள் அமைப்பதற்கு கஷ்டமாக இதுவரை இருந்த இடங்களாகிய சாவகச்சேரி, மீசாலை, கொடிகாமம், கச்சாய், குடமியன், மிருசுவில், பளை போன்ற இடங்களிலும் நாங்கள் வெற்றிகரமாக அமைத்துக் கொடுத்திருக்கிறோம்.

தொடர்பு கொள்ளுங்கள்.

றொக் எஞ்ஜினியர்ஸ்
பருத்தித்துறை வீதி, கோப்பாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org